# கள்ளக்குடியேறிகள் குடியிருப்பு பகுதிகள் இடித்து தள்ளப்படும்

கோலாலம்பூர், ஜூன் 6- சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கள்ளக் குடியேறிகள் குடியிருப்பு முகாம்கள் இடித்து தள்ளப்படும் என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் தெரிவித்தது.

கோலாலம்பூர் மாநகரில் குறிப்பாக செந்தூல் வட்டாரத்தில் இப்படி ஏராளமான சட்டவிரோத குடியிருப்பு முகாம்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஒரே இடத்தில் மட்டும் 28 வீடுகள், 3 மளிகை கடைகள், இரண்டு பழைய உலோக பொருள் விற்பனை கடைகள் ஆகியவை




நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றை உடனடியாக அகற்றுவதற்கு மே 30ஆம் தேதி அவற்றின் உரிமையாளர்களுக்கு சம்மன்கள் வழங்கப்பட்டன.

ஒரே வாரத்திற்குள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் அவர்கள் அங்கிருந்து வெளியேற வில்லை.

இதனை அடுத்து 1974 ஆம் ஆண்டு கட்டட நிர்மாணிப்பு சட்டம் செக்ஷன் 46 விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். மாநகராட்சிக்கு சொந்தமான ரிசர்வ் இடங் களில் மேற்கொள்ளப்படும் ஆக்ரமிப்பு செயல்களுக்கு இனியும் அனுமதி கிடையாது.

கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம், தேசிய பதிவு இலாகா, பொது தற்காப்பு படை, குடிநுழைவு இலாகா காவல்துறை ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகள் இனி அடிக்கடி கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.